TATA BALANCED FUND

(An Open Ended Balanced Fund)

TATA MUTUAL FUND

Expertise that's trusted




# நிரந்தர வருவாய் மற்றும் முதலீடு பெருகும் வாய்ப்புகள் அளிக்கும் உன்னத ஆதாயங்கள்*

இவற்றை விரும்பும் முதலீட்டாளர்களுக்கு ஏற்ற புராடெக்ட்#:

- நீண்ட கால முதலீட்டு மதிப்பு அதிகரித்தல்
- பெருவாரியாக மூலதனப் பங்குகளிலும் அதனைச் சார்ந்த ஆவணங்களிலும், ஒரு பகுதி (25% முதல் 35% வரை) நிரந்தர வருவாய் ஆவணங்களிலும் முதலீடு செய்யப்படும்
- இது **மிக அபாய** ■ **(பழுப்பு)** திட்டம் என்று கருதப்படும். தங்கள் முதலீடு மிகை அபாயத்திற்கு உட்பட்டிருக்கும் என்று முதலீட்டாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்

**# சந்தேகம் தோன்றும் பட்சத்தில், இத் திட்டம் அவர்களுக்கு ஏற்றதுதானா என்பதை தங்கள் நிதி ஆலோசகர்களிடம் முதலீட்டாளர்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.**

**கவனிக்கவும்:** அபாயங்கள் இவ்வாறாக வகை படுத்தப்பட்டிருக்கின்றன:

(பழுப்பு) தங்கள் முதலீடு மிகை அபாயத்திற்கு உட்பட்டிருக்கும் என்று முதலீட்டாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

(மஞ்சள்) தங்கள் முதலீடு மிதமான அபாயத்திற்கு உட்பட்டிருக்கும் என்று முதலீட்டாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

(நீலம்) தங்கள் முதலீடு குறைந்த அபாயத்திற்கு உட்பட்டிருக்கும் என்று முதலீட்டாளர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

**பரஸ்பர நிதி முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, முதலீடு செய்யும் முன்னர் திட்ட ஆவணங்களைக் கவனமாகப் படிக்கவும்.**

## முதலீடு தத்துவம்

மூலதனப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் கலவையில் முதலீடு செய்து சொத்து தொகுப்பின் ஈட்டு ஆதாயங்களை பெருக்கி சந்தை ஏற்ற இறக்கங்களைக் குறைக்கும் வாய்ப்புகளை டாடா பேலன்ஸ்ட் பண்ட் பயன்படுத்திக் கொள்ளும். சந்தை நிலவரம் மற்றும் எதிர்கால அனுமானங்கள் அடிப்படையில் திட்ட சொத்துகளை பங்குகளிலும் கடன் பத்திரங்களிலும் போதிய விகிதாசாரத்தில் கலந்து கவனமாக முதலீடு செய்யும். இரண்டு பலன்களாக முதலீடு பெருக்கம் மற்றும் நிரந்தர வருவாயை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாக இருக்கும். ஈட்டு ஆதாயத்தில் அல்ஃபா-வைச் சேர்க்கும் வகையில் பல்துறை பங்குகளில் எதிர்கால ஈக்விடி சந்தை அனுமானத்தை அனுசரித்து திட்ட சொத்துகளைச் சுறுசுறுப்பாக நிருவகிக்கும். கடன் பத்திரங்களைப் பொறுத்த வரையில், வலுவான முதலீடு தொகுப்பை உருவாக்க நிரந்தர வருவாய் மற்றும் அதிக விலை மாற்றத்திற்குள்ளாகாத ஆவணங்களைத் தேர்ந்தெடுத்து பலம் கூட்டும். கடன் பத்திர முதலீடுகள் திட்ட நிதிக்கு நிரந்தர வருவாய் அளித்துக் கொண்டிருக்கும். வழக்கமான முழு ஈக்விடி முதலீடுகளுடன் ஒப்பிடும் போது, இத் திட்டத்தின் ஈக்விடி முதலீடுகள் சந்தை ஏற்றத்தின் நன்மைகள் பெறும் வாய்ப்புகளையும், கடன் பத்திர முதலீடுகள் நிதிக்கு நல்ல திடமான அடித்தளத்தையும் அமைத்துக் கொடுக்கும்.

## பேலன்ஸ்ட் பண்டுகள் குறித்து:

**சொத்து வளர்ச்சி மற்றும் வருவாய் வாய்ப்புகளின் சேர்க்கை:**

பங்குகள் மற்றும் கடன் பத்திர கலவையில் செய்யப்படும் முதலீடுகளால், முதலீட்டாளர்களுக்கு நீண்ட காலவரையில் முதலீடு மதிப்பு பெருக்கம் மற்றும் நிரந்தர வருவாய் கிடைக்கும் வாய்ப்புகளுக்கு பேலன்ஸ்ட் பண்டு வழி செய்து கொடுக்கிறது.

**ஈக்விடி பண்டுகளுடன் ஒப்பிடும்போது மதிப்பு மாற்ற நிகழ்வுகள் குறைவு**

ஈக்விடி பண்டுகளுடன் ஒப்பிடும்போது மதிப்பு மாற்ற நிகழ்வுகள் குறைவாகவும், கடன் பத்திர பண்டுகளுடன் ஒப்பிடும்போது அதிகமாகவும் பேலன்ஸ்ட் பண்டுகள் செயல்படுகின்றன. அதே சமயத்தில், பேலன்ஸ்ட் பண்டு சொத்துகள் மூலதனப் பங்குகளில் அதிக அளவில் முதலீடுகள் செய்யப்படுவதால் கடன் பத்திர பண்டுகளைக் காட்டிலும் அதிக எதிர்கால ஆதாயங்களுக்கான வாய்ப்புகளும் பெருகுகிறது.

## டாடா பேலன்ஸ்ட் நிதித் திட்டத்தை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

**சொத்து பெருக்கத்திலும் ஓயாத மாற்றத்தைக் குறைப்பதிலும் குறி வைத்திருக்கும்**

- இடைக்காலத்திலிருந்து நீண்ட காலவரை நெடுக்கத்தில் திட்ட சொத்துகள் மதிப்பு பெருகுவதை குறிவைத்து மூலதனப் பங்குகளில் முதலீடு.
- நிரந்தர வருவாயை உறுதி செய்யும் வகையில் கடன் பத்திரங்களில் குறைந்தபட்சம் 25% முதலீடு

**டிப்ஸ் மெக்கானிசத்தில் ஆட்டோமேடிக் ரீபேலன்ஸிங் செய்ய இலாபத்தைச் சேர்ப்பதும் வாங்குவதும்**

- சந்தை நடவடிக்கைகள் அளிக்கும் சமீபத்திய மற்றும் இடைநிலை கால வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஆட்டோமேடிக் ரீபேலன்ஸிங் செயல்பாடுகளால் இலாப தொகைகள் சேர்க்கப்படுகிறது.

**சுறுசுறுப்பான போர்ட்ஃபோலியோ நிருவகம்**

- பொருத்தமான காலத்தில் சீரிய துறை சுழற்சி கலவையின் மூலம் மூலதனப் பங்குகளைத் தேர்ந்தெடுத்தல்
- திட்ட சொத்துகளுக்கு திடமான வருவாயைக் கூட்டும் வகையில் கடன் பத்திர முதலீடுகளைச் செய்து எதிர்கால சொத்து மதிப்பு பெருக்கத்தில் குறி வைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- போர்ட்ஃபோலியோவில் பெரிய அளவில் ரொக்க தேவைகளை தவிர்த்திருத்தல்

**பலமான அடிப்பையுள்ள நிறுவன பங்குகளைத் தேர்ந்தெடுத்தல்**

தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனப் பங்குகள் இவற்றைக் கொண்டதாக இருக்கும்:

- அதிக ரொக்க வருவாய்
- அதிக மூலதன செயல்திறன்
- எதிர்காலத்தில் அதிக வருவாய் ஈட்டும் வாய்ப்புகள்

**கடன் மற்றும் வட்டி வீத அபாய நிருவாகம்**

கடன் மற்றும் வட்டி வீத அபாயங்களைக் குறைக்கும் பொருட்டு நிரந்தர வருவாய் ஈட்டும் ஆற்றலைப் பெற்றிருக்கும் கடன் பத்திர ஆவணங்களையே தேர்ந்தெடுத்து திட்ட சொத்துகள் குறித்த விகிதத்தில் முதலீடு செய்யப்படும்.

## யாரெல்லாம் இதில் முதலீடு செய்யலாம், ஏன்?

- முபங்கு முதலீடுகள் மூலம் சொத்து மதிப்பு பெருக்கம் மற்றும் கடன் பத்திர சந்தையிலிருந்து நிரந்தர வருவாய் ஆகிய இரட்டிப்பு பலன்கள்
- பெருவாரியாக பங்கு சந்தையிலும், போதுமான அளவில் கடன் சந்தையிலும் கலந்து முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களுக்கு ஏற்றது
- கடந்த 18 வருடங்களுக்கும் அதிக அனுபவம், பற்பல ஏற்ற இறக்க சுழச்சிகளை வெற்றிகரமாகச் சந்தித்திருக்கும் திறன்
- நீண்ட காலவரையில் சொத்து மதிப்பு பெருக்கத்தை குறி வைத்து 3 வருடம் அல்லது அதற்கும் மேலான காலவரையில் மிதமானதிலிருந்து தீவிர அபாயங்களை எதிர்கொள்ள தயாராக இருக்கும் பங்கு சந்தை முதலீட்டாளர்கள்
- மூலதனப் பங்கு திட்டமாக இத் திட்டம் கருதப்படுவதால் வழக்கமான மூலதனப் பங்கு திட்டங்களுக்குக் கிடைக்கும் வரிக்கழிவுகள்

*வினியோகிப்பவர்கள்:*

'TMF' என 57575 க்கு SMS செய்க. இணையதளம்: www.tatamutualfund.com
கூப்பிடுங்கள்: 1800-209-0101 (ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூட)

Follow us on
www.facebook.com/tatamutualfund